2009 பிப்ரவரி 24] [திரு. எ.வ. வேலு]

நாங்கள் பத்திரிகையிலே கொடுத்திருக்கிறோம். யார் வேண்டுமானாலும் புகார் செய்யலாம். உடனே தயவு தாட்சண்யம் இல்லாமல் தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பலமுறை நாங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். எனவே, இந்த அரிசிக் கடத்தல் சம்பந்தப்பட்டதில்கூட எங்கேயாவது தவறு இருக்கிறது என்று சொன்னால், அந்தத் தகவலை சட்டப் பேரவை உறுப்பினர்கள் உடனே எங்களுடைய அலுவலகத்திற்கு அனுப்புங்கள் அதன்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசைப் பொறுத்தளவுக்கு கடத்தலைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். மேலும் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்வோம். இதை அறவே ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளும். அவ்வப்பொழுது முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெறுகிறோம். அந்த அடிப்படையிலே அரிசிக் கடத்தல் என்பது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்கிற தகவலையும் இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் அவர் பதில் சொல்லி இருக்கிறார். திரும்பவும் என்ன கிளாரிஃபிகேஷன், நேரம் என்ன ஆயிற்று? இன்னும் பொது விவாதத்தில் நிறைய பேர் பேச வேண்டும். உட்காருங்கள்.

(இ) திருத்துறைப்பூண்டி, பிறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில் மரகதலிங்கம் காணாமல் போனது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஔஷதீஸ்வரர் திருக்கோயிலின் விலை மதிப்பற்ற மரகதலிங்கம் 19-2-2009 அன்று இரவு காணாமல் போனதால் ஏற்பட்ட நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன், திரு. சு. குணசேகரன், திரு. எஸ். இராசசேகரன், திரு. தி. இராமசாமி ஆகியோரும் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தகவல் கோரல் என்ற முறையில் இதை எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக கட்சிக்கொருவர் என்ற முறையில் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திரு. கி. ஆறுமுகம். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

11-430—12a

[2009 பிப்ரவரி 24

முற்பகல் 11-30

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஔஷதீஸ்வரர் என்கிற மருந்தீஸ்வரர் ஆலயத்தில் கடந்த 19 ஆம் தேதி அங்கு இருந்த தீர்த்தவிடங்கர் என்கிற விலை மதிப்பற்ற மரகதலிங்கம் கள்வர்களால் திருடப்பட்டுள்ளது. இது அந்தப் பகுதியில் இருக்கிற பக்தர்கள் மத்தியிலே மிகப் பெரிய கொந்தளிப்பை உண்டாக்கி இருக்கிறது. இந்தத் திருக்கோயிலில் களவு நடப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாகத்தான் அங்கே திருக்குடமுழுக்கு நடைபெற்று இருக்கிறது. இந்த மரகதலிங்கம் களவு போனதால் அந்தப் பகுதியிலே ஒரு பதற்றமான நிலை இருக்கிறது.

இதேபோன்று தமிழகம் முழுமைக்கும் பல்வேறு திருக்கோயில்களில் விலை உயர்ந்த பொருட்கள், ஆபரணங்கள், சிலைகள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கவனமாகப் பாதுகாப்பதற்காக அரசு பாதுகாவலர்களை நியமிப்பதற்கு முன் வரவேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைக்கிறேன். சிலைகளைத் திருடுவதற்கு ஒருசில குழுக்கள் மட்டுமே தமிழகத்திலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அந்தக் குழுக்களைக் கண்காணிப்பதற்கு இந்து சமய அறநிலையத் துறையினரும், காவல் துறையினரும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்தால் இதை ஒடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். எனவே இதுபோன்ற திருட்டுகளை ஒழிப்பதற்கு நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அவையின்மூலம் நான் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர், நாகை மாவட்டங்களில் திருக்கோயில்களில் விலை மதிப்பற்ற மரகதலிங்கம், வைர நகைகள் எல்லாம் இருப்பது உண்மை. ஆகவே, அந்த வகையில் கடந்த 19-02-2009 அன்று விடியற்காலை 4-00 மணியளவில், திருத்துறைப்பூண்டி, பவ ஔஷதீஸ்வரர் திருக்கோயிலில் இருந்த அந்த மரகதலிங்கம் காணாமல் போய் இருக்கிறது. குறிப்பாக எங்கள் பகுதி மாவட்டங்களில் தொடர்ச்சியாக இதுபோன்ற சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மன்னார்குடி

2009 பிப்ரவரி 24] [திரு. கே. உலகநாதன்]

கோயிலில் இருந்த வைர நகைகள் காணாமல் போயிருக்கின்றன. அதற்கடுத்தாற்போல திருவாரூரில் இருந்த மரகதலிங்கம், அதற்கடுத்தாற்போல திருக்கரவாசல், அதற்கடுத்தாற்போல நாகை மாவட்டத்தில் அந்தக் கோயிலில் இருந்த மரகதலிங்கம், அதற்கடுத்தாற்போல திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, தொடர்ச்சியாக இந்த மரகதலிங்கம் காணாமல் போவது கோயிலினுடைய கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றபோது இந்தத் திருட்டு நடைபெறுகிறது. ஆகவே, இந்தச் சொத்து அரசின் சொத்து. அந்தப் பகுதியில் பக்தர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் மிகப் பதற்றமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் திருடர்கள் யாராக இருந்தாலும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். குறிப்பாக, மன்னார்குடியில் வைர நகைகள் காணாமல் போனதற்குப் பின்னாலே, காவல் துறை, பத்திரிகை செய்தியில் அரசியல் தலையீட்டின் காரணமாக நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ச்சியாக எங்கள் மாவட்டத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, பொது மக்கள் மத்தியிலும், பக்தர்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்ற அந்த பதற்றமான சூழ்நிலையைப் போக்குகின்ற வகையில் உடனடியாக அந்த மரகதலிங்கத்தைக் கண்டுபிடித்து கோயிலில் ஒப்படைக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து உரிய தண்டனை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, இதுபோன்ற விலை மதிப்பற்ற பொருட்கள் இருக்கக்கூடிய அந்தக் கோயில்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த திரு. கி. ஆறுமுகம் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தோழர் திரு. உலகநாதன் அவர்களும், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி காவல் நிலைய சரகத்தில் இருக்கக்கூடிய பிறவி மருந்தீஸ்வரர் உடனுறை பெரிய நாயகியம்மன் கோயிலில் தியாகராயர் சன்னதியில் வெள்ளிப் பெட்டியில் வைத்திருந்த மரகதலிங்கம் கடந்த 19-2-2009 அன்று இரவு காணாமல்

போனது பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலை பற்றியும் இங்கே எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, கடந்த 19 ஆம் தேதி இரவு கள்வர்களால் திருடப்பட்ட அந்த மரகதலிங்கத்தை மீட்பதற்கான முயற்சிகளும் அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியும் இந்த அவையிலே நான் சமர்பிக்க விரும்புகிறேன்.

முற்பகல் *11-35*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி காவல் நிலைய சரகத்தில், திருத்துறைப்பூண்டியில் இருக்கக்கூடிய பிறவி மருந்தீஸ்வரர் உடனுறை பெரியநாயகி அம்மன் கோயிலில், தியாகராயர் சன்னதியில் வெள்ளிப்பெட்டியில் பழமைவாய்ந்த சுமார் 1 கிலோ எடையுள்ள மரகதலிங்கம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கி வருகிறது. இக்கோயிலுக்கு முன்னாள் இராணுவ வீரர் ஒருவரும், அக்கோயிலினுடைய தோட்டக் காவலர் ஒருவரும் இரவுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர். கடந்த 19 ஆம் தேதி அன்று வழக்கம்போல கோயில் பூட்டப்பட்டு இரவுக் காவலர்கள் காவல் பணியில் இருந்து வந்தனர். மறுநாள், அதாவது 20-2-2009 அன்று காலையில் கோயில் காவலர்கள், தியாகராயர் சன்னதியை பார்த்தபோது, சன்னதியின் கிரில் கேட் மற்றும் அலமாரி உடைக்கப்பட்டு வெள்ளிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த மரகதலிங்கம் மற்றும் 2 தங்கத் தாலிகள் காணாமல் போனது தெரிய வந்துள்ளது. இதுகுறித்து கோயிலின் நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர் கோயிலுக்கு விரைந்து சென்று மரகதலிங்கம் மற்றும் தங்கத் தாலிகள் திருடு போனதை உறுதி செய்து கொண்டு திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார். அதன்பேரில் காவல் நிலைய குற்ற எண் 70/9-ன்கீழ் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 457, 380 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்தக் களவு குறித்து தகவல் அறிந்ததும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும், இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய இணை ஆணையர், உதவி ஆணையர், சென்னையிலிருந்து இந்து சமய அறநிலையத் துறையின் கூடுதல் ஆணையர் (பொறுப்பு) மற்றும் காவல் துறையின் சிலைகள் களவு தடுப்புப் பிரிவு, துணைக் காவல் துறைத் தலைவர் ஆகியோர் திருத்துறைப்பூண்டியில் முகாமிட்டு இக்களவு குறித்து தீவிர புலன் விசாரணை நடத்தி வருகிறார்கள். சம்பவ இடத்திற்கு உடனடியாக

2009 பிப்ரவரி 24] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

கை ரேகை மற்றும் தடய அறிவியல் நிபுணர்கள் சென்று கை ரேகை மற்றும் தடயங்களைச் சேகரித்து உள்ளனர். துப்பறியும் நாயும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டது. இவ்வழக்கில் தனிப் படைகள் அமைக்கப்பட்டு, பழைய குற்றவாளிகள் மற்றும் சந்தேக எதிரிகள் குறித்து விசாரணை செய்து வருகின்றனர். சென்னை குற்றப் புலனாய்வுத் துறையின் சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு அப்பிரிவினர் உடனடியாக திருத்துறைப்பூண்டி சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகளை உடனடியாக கைது செய்து, களவுபோன மரகலிங்கத்தைக் கைப்பற்றிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் காவல் துறையினுடைய ஒத்துழைப்போடு மேற்கொண்டு வருகின்றனர். மேலும், வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

இங்கே நம்முடைய உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் பேசும்பொழுது, குறிப்பிட்டுச் சொன்னார்கள், காவல் துறையினரோடு திருக்கோயில்களினுடைய நகை மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்கின்ற பணியை இணைந்து செய்தால், திருட்டுகள் தடுக்கப்படுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இதுபோன்ற பாதுகாப்புப் பணிகள் தொடர்ந்து காவல் துறையோடு இணைந்துதான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், அதைப்போல முன்னாள் இராணுவத்தினரும், இந்தப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஏறத்தாழ 36,420 திருக்கோயில்கள் இந்தத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆகவே எண்ணிக்கை பெரிய அளவில் இருக்கின்ற காரணத்தால் அனைத்துத் திருக்கோயில்களிலும் இதுபோல் செய்ய இயலாமல் அங்கொன்றும் இங்கொன்றும் இவ்வாறு களவு நடப்பது வருத்தத்திற்குரிய ஒன்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சமீபத்தில் கடந்த 6-2-2009-ல்தான் இந்தத் திருக்கோயிலினுடைய குட முழுக்கு விழா நடைபெற்றது. அப்படி குட முழுக்கு நடைபெற்ற நேரத்தில் திருப்பணிகளுக்காக அங்கேயிருந்த களவு எச்சரிக்கை மணி பிரித்து எடுத்து வைக்கப்பட்டிருந்தது. திருக்கோயிலினுடைய அந்த மின் இணைப்புகள் இன்னும் சரிசெய்யப்படாமல் இருந்ததால், அன்று அந்தக் களவு எச்சரிக்கை மணியும் பிரித்து எடுத்து வைக்கப்பட்டிருந்தது. ஆகவே, திருட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கு இந்தக் குட முழுக்குச் சம்பவம் ஒரு காரணமாக இருந்திருக்கிறது.

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2009 பிப்ரவரி 24

முற்பகல் 11-40

ஆகவே, இந்தத் திருட்டுபற்றி பல்வேறு தகவல்கள் காவல் துறையினருக்கு வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே விசாரணையை மேற்கொண்டிருக்கின்றார்கள். களவுபோன அந்த மரகதலிங்கம் வெகு விரைவிலே மீட்கப்படும் என்பதையும், அதற்காக உரிய நடவடிக்கை காவல் துறையினர்மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் எடுத்துச் சொல்கிறேன்.

சமீபத்திலேகூட இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒருசில திருட்டுக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றிருக்கின்றன. அவற்றைப் பற்றியும் புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்திலேகூட திருத்தணியிலே கடந்த வாரம் உண்டியல் திருடன் ஒருவன் கையும் களவுமாக சம்பவ இடத்திலேயே பிடிக்கப்பட்டு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த ஓராண்டுக்கு முன்னர் சென்னை மயிலை கபாலீசுவரர் திருக்கோயிலில் உண்டியல் திருட்டில் ஈடுபட்ட திருடன், 10 மாதங்களுக்குப் பிறகு மேற்கு வங்க மாநிலத்திலே கைது செய்யப்பட்டு, நம்முடைய காவல் துறையின் சார்பிலே இங்கே குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறான்.

ஆகவே, இதுபோன்ற திருட்டுக்கள் ஒருசில நடைபெற்றாலும்கூட, நம்முடைய காவல் துறையினுடைய முழு ஒத்துழைப்போடு அந்தக் களவுகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்ற சம்பவம் நடைபெறுகிறது என்பதைத் தங்கள்மூலமாக இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(ஈ) சேரன்மகாதேவி மற்றும் அம்பாசமுத்திரம் தொகுதிகளில் வாழைப் பயிர் சேதத்திற்கு நஷ்ட ஈடு கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9-10-2008 அன்று சேரன்மகாதேவி தொகுதி, அம்பாசமுத்திரம்